## <u>இந்திய உயர் ஸ்தானிகராலயம்</u>
## <u>கொழும்பு</u>

**ஊடக அறிக்கை**
**********************

# <u>கடன் மறுசீரமைப்பு குறித்து இலங்கை அரசாங்கத்துடனான இருதரப்பு பேச்சுகள் ஆரம்பம்</u>

இலங்கை அரசாங்கத்தால் அண்மையில் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளிக்கும் முகமாக, இலங்கையால் இந்தியாவுக்கு செலுத்தப்படவேண்டியுள்ள உத்தியோகபூர்வ இருதரப்பு கடன்களை மறுசீரமைத்தல் தொடர்பான முதல் சுற்றுப்பேச்சுகள் கொழும்பிலுள்ள உயர் ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டில் 2022 செப்டெம்பர் 16 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது. சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நிகழ்ச்சித்திட்டமானது விரைவில் அங்கீகரிக்கப்பட்டு செயல்வடிவம் பெறவேண்டுமென்பதற்கு இந்தியா ஆதரவளிப்பதை மிகவும் சுமூகமாக நடைபெற்ற இப்பேச்சுகள் பிரதிபலிக்கின்றன, அத்துடன் இலங்கை கடன்களின் ஸ்திரத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக கடன்வழங்குனர்களின் உத்தரவாதமும் சர்வதேச நாணய நிதியத்தின் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு அவசியமானது. இவ்விடயத்தில் தொடர்புடைய இலங்கை தரப்பினருடன் இந்தியா தொடர்ந்தும் நெருக்கமாக பணியாற்றும் என்பது குறிப்பிடத்தக்கது.

********

**கொழும்பு**
**20 செப்டெம்பர் 2022**